

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 35 உதவி பொறியாளர்களுக்கு நேற்று (10.07.25) வாரிய தலைமை அலுவலகத்தில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது வாரிய மேலாண்மை இயக்குனர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் மற்றும் வாரிய அலுவலர்கள் உடன் இருந்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பின், கடந்த 2021 மே முதல் தற்போது வரை கருணை அடிப்படையில் 99 நபர்களுக்கும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக 98 நபர்களுக்கும் ஆக மொத்தம் 197 நபர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணிபுரிய பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### அறநிலையத்துறை நிதியிலிருந்து கல்லூரிகள் கட்டப்படுவதா என்று கேட்பது

# எடப்பாடி பழனிசாமியின் அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். மனநிலை!

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை

சென்னை, ஜூலை 11 -

அறநிலையத் துறை நிதியிலிருந்து கல்லூரிகள் கட்டப்படுவதா? என்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் கேட்பது அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். மனநிலைதான்! திராவிட இயக்கக் கொள்கைக்கு எதிரான போக்குக்கு மக்கள் பாடம் கற்பிப்பார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

08.07.2025 அன்று தனது பிரச்சாரத்தின் போது அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை நிதியிலிருந்து கல்லூரிகள் கட்டப்படுவதை எதிர்த்துப் பேசியுள்ளார்.

அறநிலையத்துறைக்குக் கோயில்களில் கிடைக்கும் நிதி என்பது மக்களின் பணமே! அதை மக்களுக்கே திருப்பி அளிப்பதற்கும், அதிலும், அவர்கள் கல்வி அறிவு பெற வாய்ப்பு வழங்குவதற்கும், காங்கிரஸ் தொடங்கி கடந்த ஆட்சிக் காலங்கள் அனைத்திலும் கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஏன், அதிமுகவின் மேனாள்



முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமியே 2017 ஆம் ஆண்டு பழனியாண்டவர் தொழில்நுட்பக் கல்லூரியின் நிர்வாகக் கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்.

### ஆர்.எஸ்.எஸ்.சின் கண்ணாடி என்பது அப்பட்டமாகத் தெரிகிறது

இந்து மதத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாகப் பெண்களும் கல்வி பெற வாய்ப்பாக அறநிலையத் துறையால் உருவாக்கப்படும் கல்லூரிகள் எடப்பாடியின் கண்களை உறுத்துகின்றன என்றால், அவர் அணிந்திருப்பது ஆர்.எஸ்.எஸ்.சின் கண்ணாடி என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

கோயில்களில் நடந்த பார்ப்பனக் கொள்ளைகளைத் தடுக்கவும், கோயில் சொத்துகளைக் காக்கவும், சரியாக நிர்வகிக்கவும் திராவிட இயக்கத்தின் தோற்றுவாயான நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டதே இந்து சமய அறநிலையத் துறை ஆகும். அதற்கு மாறாக, அறநிலையத்துறையை ஒழிக்க வேண்டும் என்பதே அந்நாள் தொட்டு இந்நாள் வரை ஆர்.எஸ்.எஸ்.சின் பார்ப்பனர்களின் நோக்கம்! எடப்பாடி பழனிசாமி யார் பக்கம் என்பதை இந்த ஒரு நிலைப்பாடு காட்டிவிடும்.

### அடமானம் வைக்கப்பட்டுவிட்ட இன்றைய அ(மித்ஷா)தி.மு.க.

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பார்வையோ, அறிஞர் அண்ணாவின் கொள்கை குறித்த புரிதலோ, பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.சிடம் அடமானம் வைக்கப்பட்டுவிட்ட இன்றைய அ(மித்ஷா). தி.மு.க.வின் பொதுச் செயலாளருக்குக் கொஞ்சமும் இல்லை என்பதைத்தான் அவரது இந்தப் பேச்சு காட்டுகிறது.

கடந்த மாதத்தில் மதுரையில் இந்து முன்னணி நடத்திய முருக பக்தர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தான் இன்று எடப்பாடி பழனிசாமி ஒப்பித்திருக்கிறார்.

திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் பல்கலைக்கழகம் உள்பட பத்துக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுவதை அறிவாரா ஆர்.எஸ்.எஸ்.சின் ஊதுகுழல் எடப்பாடி பழனிசாமி?

### உரிய பாடத்தை மக்கள் கற்பிப்பார்கள்

தமிழ்நாட்டு மக்கள் சமூக நீதியின் சரித்திரம் தெரிந்தவர்கள்! தெளிந்தவர்கள்! சமூகநீதியில், கல்வி வளர்ச்சியில் கை வைக்க நினைக்கும் எவருக்கும் இந்த மண்ணில் மக்கள் ஆதரவு இருந்ததில்லை.

'திராவிட மாடல்' தி.மு.க. அரசுக்கு எதிராகப் பேசுகிறோம் என்ற பெயரில், திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், மக்களுக்கும் எதிராகப் பேசிக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி! இதற்குரிய பாடத்தை மக்கள், வரும் சட்டமன்றத் தேர்தலில் கற்பிப்பார்கள் என்பது உறுதி!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஆயிரம் விளக்கு கலைஞர் நூலகத்தில் வாசகர் சந்திப்பு!





சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 08.07.2025 அன்று 110 அ வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு நடைபெற்றது. கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் ச.யாசர் அரபாத் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் நூலகத்தின் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார். மேலும் பெண்களின் முன்னேற்றத்திற்காக தி.மு.க. என்னென்ன திட்டங்களை கொண்டுவந்துள்ளது என்றும், அவற்றால் அடைந்துள்ள மாற்றங்கள் என்னவென்றும் விரிவாகப் பேசினார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான 'திராவிடப் போராளிகள்' நூல் வழங்கப்பட்டது. சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் என்.மோகன்வேல், ஜே.எம்.எச்.இம்ரான், பகுதி அமைப்பாளர் வே.வேல்குமார், பகுதி துணை அமைப்பாளர் மு.லோகநாதன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# என்.சங்கர் - ச.லட்சுமி சங்கர் இல்ல சுயமரியாதை திருமணம்!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

திருவண்ணாமலை, ஜூலை. 11-

திராவிடத்தின் திருமகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.சங்கர், வெம்பாக்கம் மேனாள் ஒன்றியக் குழுத் தலைவர் ச.லட்சுமி சங்கர் ஆகியோரின் புதல்வர் மருத்துவர் எஸ்.கௌதமன்



மருத்துவர் சி.யுவஸ்ரீ ஆகியோர் சுயமரியாதை திருமணம் 14.07.2025, திங்கள் கிழமை காலை 9:00 மணியளவில், காஞ்சிபுரம், செவிலிமேட்டில் அமைந்துள்ள சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஆரணி பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக மருத்துவர் அணி துணை தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் மருத்துவர் எம்.கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.





